DINASUDAR 13 FEB 09

சத்குரு ஜக்கி வாசுதேவ் உங்களுடன் பேசுகிறார்

உண்மையான பிரார்த்தனை

உங்கள் பிரார்த்தனை என்ன? கடவுளே! அதை கொடுப்பா, இதைக் கொடுப்பா, காப்பாத்துப்பா என்பதுதான். இத்தகைய பிரார்த்தனைகள் மூலம் நீங்கள் இறைவனை தேடவில்லை. மகிழ்ச்சியையும் பாதுகாப்பையும் தான் தேடுகிறீர்கள். உங்கள் பிரார்த்தனை மூலம் உண்மையில் நீங்கள் விரும்புவது நல்வாழ்வு மட்டுமே. ஆனால் அதை நீங்கள் ஒப்புக் கொள்ள மறுக்குறீர்கள். உங்களுக்கு நீங்களே நேர்மையாக இருப்பது தான் நீங்கள் எடுக்க வேண்டிய முதல் படி, அதன் பிறகு உங்கள் உண்மையான மகிழ்ச்சிக்கும் நலவாழ்விற்கும் தடையாக இருப்பதை எப்படிக் கடப்பது என்று பார்க்கலாம்.

நாம் நமக்குள் இருக்கும் முட்டாள்தனத்தை கவனிக்காமல் விட்டுவிட்டு, இறைவனை அடைவதற்கு முயற்சி செய்தால் அது பயனளிக்காது. நீங்கள் மதங்களின் மேல் கொண்டுள்ள ஆழமான விருப்பத்தை உண்மையில் கவனித்துப் பார்த்தால், இறைத்தன்மையை அடைவதை நீங்கள் நோக்கமாகக் கொள்ளவில்லை என்பது புரியும். வசதி, வளம், அதிகாரம், இன்பம் ஆகியவற்றைத்தான் விரும்புகிறீர்கள். இவற்றையெல்லாம் அடைவதற்கு இறைவன் ஒரு கருவி என்று நினைக்கிறீர்கள். இவற்றையெல்லாம் நீங்கள் அடைய விரும்புவது உங்கள் பேராசை மற்றும் பயம் காரணத்தால்தான். உங்கள் பிரார்த்தனையின் அடிப்படையாக பயமும் பேராசையும்தான் உள்ளது. இது பயன் தராது.

உண்மையான பிரார்த்தனை என்பது எங்கும், எதிலும் வியாபித்துள்ள இறைத்தன்மையுடன் நீங்கள் கொள்ளும் ஆழமான தொடர்பு. அது ஒரு விதமான தன்மை, ஒரு ஆழமான இருப்பு. நாம் பிரார்த்தனையாகவே மாறும் தருணங்கள் மிகவும் அழகானவை. ஆனால் நாம் நம் உள்தன்மையோடு தொடர்பில் இருக்கும் போதுதான் அந்த பிரார்த்தனை தன்மையை அடைய முடியும். அப்போது அந்த அனுபவம் ஒரு முழுமையான ஆனந்த நிலை.